**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.DVC.17/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சௌந்தர்யா | Prosecution | PW-1 Cross |
| Father Name | பிரவீன்குமார் | Defence | |
| Village | விளந்திடசமுத்திரம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 43/2025 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha Grade-III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day.**

**29.09.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

**1.** எனது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். நான் எனது திருமணத்திற்கு முன்பாக **MBA** முடித்துவிட்டு சென்னையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன் என்றால் இல்லை. நான் அப்போது வேலை பார்க்கவில்லை. வீட்டில் தான் இருந்தேன். என் கணவர் **B.E.,M.BA** படித்த பட்டதாரி என்றால் சரிதான். என் கணவருக்கு உடன் பிறந்த ஒரு அக்கா இருக்கிறார் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு முன்பாகவே என்னுடைய மாமியார் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். நான் திருமணம் செய்து கொண்ட போது எனது நாத்தனார் ஏற்கனவே திருமணம் முடித்து திருப்பூர் மாவட்டத்தில் அவருடைய கணவர் வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். எனது திருமணம் முடிந்த அன்றைய தினமே மறு வீடு நிகழ்ச்சிக்காக நாங்கள் சீர்காழி வந்தோம் என்றால் சரிதான்.

2. சீர்காழியில் 3 நாட்கள் இருந்த பிறகு கோயமுத்தூர் கணபதி பகுதியில் உள்ள எனது பெரியப்பா மகன் ராஜேஷ் வீட்டிற்கு நானும் என் கணவரும் சென்று தங்கி இருந்தோம் என்றால் சரிதான். இந்த மனுவில் 4,5 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளது எனது கணவரின் பெரியப்பாவின் மகன் மற்றும் அவருடைய மனைவி என்றால் சரிதான். அவர்கள் இருவரும் திருப்பூர் மாவட்டம் போடிப்பட்டி என்னும் பகுதியில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னுடைய மாமனார் உடுமலைப்பேட்டையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

என்னை எனது கணவர் கணபதியில் உள்ள என்னுடைய சகோதரர் வீட்டில் விட்டுவிட்டு அவர் வேலை செய்யும் கர்நாடக மாநிலத்தில் உள்ள சித்ரதுர்கா பகுதிக்கு சென்றார் என்றால் இல்லை. அவர் உடுமலைப்பேட்டையில் உள்ள அவருடைய வீட்டிற்கு சென்றார்.அங்கு நானும் என் கணவரோடு சென்று 15 நாட்கள் தங்கி இருந்தேன். அவ்வாறு உடுமலை பேட்டையில் நான் 15 நாட்கள் தங்கி யிருந்ததாக குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு நானும் சித்ரதுர்கா சென்று என் கணவரோடு வசித்தேன் என்றால் சரிதான். சித்ரதுர்கா பகுதியில் நாங்கள் தனி குடித்தனம் வைத்த போது என் கணவர் வீட்டை சார்ந்தவர்கள் எவரும் வரவில்லை என்றால் சரிதான். சித்ரதுர்காவில் நாங்கள் வசித்தபோது, என் கணவர் என்னை ஊட்டிக்கு சுற்றுலா அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். சித்ரதுர்கா பகுதியில் நாங்கள் குடியேறிய போது எனது வீட்டைச் சார்ந்த நபர்கள் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். என் கணவர் வீட்டாரை நாங்கள் அழைத்தோம். ஆனால் அவர்கள் வரவில்லை.

3. நான் இந்த வழக்கில் சீர்வரிசை மற்றும் நகை சம்பந்தப்பட்ட பட்டியல் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு ஊட்டிக்கு சுற்றுலா சென்று விட்டு வந்த பிறகுதான் கருவுற்றேன் என்றால் சரிதான். கர்நாடகா மாநிலத்தில் உள்ள தாவண்கரே பகுதியில் அமைந்துள்ள சிட்டி மருத்துவமனையில் தான் நான் சிகிச்சை மேற்கொண்டேன் என்றால் சரிதான். நான் கருவுற்று சிரமப்பட்ட நேரங்களிலும் எதிர்மனுதாரர்கள் வீட்டில் இருந்து யாரும் வந்து என்னை பார்க்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் தான் என்னை பார்த்துக் கொண்டார் என்றால் அவரும் வரவில்லை. என் கணவர் தான் பார்த்துக் கொண்டாரா என்றால் ஆமாம். நான் கருவுற்றிருந்தபோது 7 மாதங்கள் கழித்து குழந்தை பேருக்காக தான் சீர்காழி வந்தேன் என்றால் சரிதான். நான் சார்ந்த சமுதாய வழக்கப்படி பெண் வீட்டில் தான் சீர் செய்து வளைகாப்பு ஏற்பாடு செய்வார்கள் என்றால் தவறு. எங்கள் வீட்டில் இருந்து சொந்த பந்தங்கள் வந்து கணவர் வீட்டில் வசிக்கும் எனக்கு வளையல் அணிவித்து அதன் பிறகு என்னை அழைத்துச் செல்வார்கள் என்றால் சரிதான்.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் அவனும் தான் நான் தாக்கல் செய்த முதன்மை மனு என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்லி தான் வழக்கறிஞர் அதனை தயார் செய்தாரா என்றால் ஆமாம். 2015-2020 வரை 2-6 எதிர்மனுதாரர்கள்

நான் வசித்து வந்த சித்ரதுர்கா பகுதிக்கு வந்தார்கள் என்றோ நான் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு சென்று வசித்தேன் என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2-6 மனுதாரர்கள் இவ்வழக்கு நடவடிக்கைகளுக்கு தொடர் பெற்றவர்கள் என்றாலும் அவர்களை நீதிமன்றத்திற்கு அலைகழிக்க வேண்டும் என்கிற ஒரே நோக்கோடு அவர்களுக்கு எதிராக நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. என் முதலாவது குழந்தை பிறந்து 6 மாதங்கள் கழித்து நான் மீண்டும் சித்தரதுர்கா வந்து என் கணவரோடு வசித்தேன் என்றால் சரிதான். நான் அந்த காலகட்டத்தில் கைக்குழந்தையை வைத்துக்கொண்டு சிரமப்பட்ட போதும் எதிர் மனுதாரர்கள் வீட்டிலிருந்து யாரும் என் உதவிக்கு வரவில்லை என்றால் சரிதான். என் குழந்தைக்கு அவ்வப்போது உடல்நிலை சரியில்லாத போது எனது தாயார் வந்து கவனித்துக் கொண்டார் என்றால் தவறு. யாரும் வரவில்லை. அதன் பிறகு நான் இரண்டாவது முறை கருவுற்றேன் என்றால் சரிதான். அவ்வாறு கருவுற்றிருந்தபோது 7 மாதங்கள் கழித்து நான் மீண்டும் சீர்காழிக்கு வந்து குழந்தை பேருக்காக வசித்தேன் என்றால் சரிதான்.

6. 2வது குழந்தை பிறந்த பிறகு நான் மீண்டும் கர்நாடகா மாநிலம் சென்றபோது என் கணவர் சித்ரதுர்காவிலிருந்து பணி மாறுதல் ஆகி ஒஸ்கோட் பகுதியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி ஊரில் தனிக் குடித்தனம் வைத்த போது எதிர்மனுதாரர்கள் தரப்பிலிருந்து யாரும் வரவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் தான் என்னை அங்கு அழைத்துச் சென்று விட்டார்கள். 2-6 எதிர் மனுதாரர்கள் எந்த வகையிலும் எனக்கு எந்த தொந்தரவும் கொடுக்கவில்லை என்றால் தவறு. திருமணம் நடைபெறுவதற்கு முன்பே என் நாத்தனாரும் என் கணவரின் அண்ணன் மனைவியும் எனக்கு பல தொந்தரவுகள் கொடுத்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் எனது மனுவில் நான் அது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் நான் மனுவில் அது பற்றி குறிப்பிடவில்லை.

7. நானும் என் கணவரும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்த சமயத்தில், என் கணவர் என்னை முறையாக பராமரிக்கவில்லை என்று சொல்லி இரு தரப்பு உறவினர்கள் முன்னிலையில் ஏதேனும் பேச்சு வார்த்தை நடந்ததா என்றால் நடக்கவில்லை. ஏனெனில் நான் அப்போதெல்லாம் கர்நாடக மாநிலத்தில் தனியாக இருந்தேன். அங்கு உறவினர்கள் வருவதற்கு வேலை இல்லை. என்

முதல் குழந்தை பார்க்க யாரும் வரவில்லை. 2வது குழந்தை பிறந்த பிறகுதான் அவர்கள் பார்க்க வந்தார்கள் அதன் பிறகு தான் பிரச்சனை ஏற்பட்டது. 2வது குழந்தையை எதிர்மனுதாரர்கள் பார்க்க வந்ததாக நான் எனது மனுவில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. 2-6 எதிர்மனுதாரர்கள் என்னை கொடுமை செய்ததாக சொல்லி காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் அவர்கள் என் புகாரை ஏற்கவில்லை. அவ்வாறு புகார் கொடுத்ததாக சொல்வது பற்றி என் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. எதிர் மனுதாரர்களால் எனக்கு குடும்ப வன்முறை எதுவும் ஏற்படவில்லை என்றாலும் பிரிவு 18ன் கீழ் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 2020ம் வருடத்தில் என் கணவர் சொந்தமாக உடுமலைப்பேட்டையில் ஒரு வீடு வாங்கினார் என்றால் சரிதான். அந்த வீட்டின் கிரைய மதிப்பு ரூ.33,50,000/- என்றால் சரிதான். அந்த வீட்டை வாங்குவதற்காக SBI வங்கியில் என் கணவர் ரூ.30,00,000/- கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி வீட்டு மதிப்பை மிகைப்படுத்தி காட்டும் விதமாக நான் ரூ.75,00,000/- என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி அல்ல. நான் அந்த கிரைய பத்திரத்தை என்னுடைய ஜீவனாம்ச மனுவில் ஒரு ஆவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9. ஒஸ்கோட்ல் இருந்து நான் வெளியே வந்த பிறகு உடுமலைப்பேட்டையில் உள்ள எதிர்மனுதாரர் வீட்டில் சென்று வாழ்வதற்கு என்ற முயற்சியும் எடுக்கவில்லை என்றால் என்னை அவர்கள் ஒஸ்கோட்டில் இருந்து அடித்து வெளியே துரத்தி விட்டார்கள். நானாக அங்கிருந்து வெளியேறவில்லை. மேலும் என் கணவர் அந்த சமயத்தில் புது வீடு வாங்கியிருக்கவில்லை. தனக்கு தனது குடும்பம் தான் முக்கியம் என்று சொல்லி அவர் தனது வீட்டாரோடு சென்றுவிட்டார். என் மாமனார் குடியிருக்கும் உடுமலைப்பேட்டை வீட்டில் சென்று தங்குவதற்கு நான் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் என்னால் அங்கு சென்று தங்க முடியாது. ஏனெனில் என் கணவர் வேறொரு பகுதியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போது நான் என் மாமனார் வீட்டில் சென்று தங்க வேண்டிய அவசியம் இல்லை. என் கணவர் தங்கி இருந்த வீட்டிற்கு சென்று வசிப்பதற்காவது நான் முயற்சி செய்தேனா என்றால் செய்தேன். நான் எனது

மனுவில் என் கணவர் எந்த வீட்டில் வசித்த போது நான் சேர்ந்து வாழ முயற்சித்தேன் என்பது பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் ராமசாமி நகர் வீட்டில் வசித்த போது நான் அவரோடு சேர்ந்து வாழ முயற்சித்தேன்.

10. என் கணவர் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டார் என்றால் சரிதான். அது பற்றிய தகவலை எனக்கு மருத்துவமனை நிர்வாகம் அளித்தது என்றால் தவறு ஒரு மூன்றாம் நபர் அந்த தகவலை அளித்தார். அவர் பெயர் கோவிந்தராஜன் என்பதாகும். கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்டு இருந்தபோது நான் என் கணவரை சென்று கவனித்துக் கொள்ளவில்லை என்றால் அந்த காலகட்டத்தில் அவரை போன் மூலமாக தான் தொடர்பு கொள்ள முடிந்தது. நான் அவரை போன் மூலம் தொடர்பு கொண்டு பேசினேன். என் கணவர் சிகிச்சை எடுத்துக் கொள்ள ஏதேனும் நிதி உதவி செய்தேனா என்றால் இல்லை. ஏனெனில் நானே பொருளாதார ரீதியாக கஷ்டத்தில் இருந்தேன். நான் என் கணவரை கொரோனா காலகட்டத்தில் போன் மூலமாக தொடர்பு கொண்டு விசாரித்ததாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு என் கணவரோடு சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றாலும் அதனால் தான் நான் அவரை கவனித்துக் கொள்ளவில்லை என்றாலும் தவறு. இன்றும் நான் என் கணவரோடு சேர்ந்து வாழ தயாராக உள்ளேன்.

11. எந்த ஒரு காரணமும் இன்றி என்னுடைய பெற்றோர்களின் இதோ போதனைகளை கேட்டு நான் அனாவசியமாக என் கணவரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல. குடும்ப வன்முறை காரணமாக தான் நான் அவரை விட்டு பிரிந்தேன். நான் என்னுடைய மாமனாரின் இறப்பிற்கு வந்தபோது உடுமலைப்பேட்டையில் உள்ள VM Lodge ல் தங்கி இருந்தேன் என்றால் சரிதான். என் கணவரின் அண்ணன் தான் அங்கு அழைத்துச் சென்று தங்கச் சொன்னார். அப்போது என் பெற்றோர்களும் என்னோடு இருந்தார்கள். என் கணவரும் அல்லது அவரைச் சார்ந்தவர்களோ என்னையும் என் பெற்றோர்களையும் அவர்களுடைய வீட்டிற்குள் விடவில்லை என்று சொல்லி காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என்னுடைய மனு மற்றும் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் தற்போதும் என் கணவரோடு சேர்ந்து வாழ நான் தயார் என்று சொல்லி குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் அவரோடு சேர்ந்து வாழ வேண்டும்

என்று உரிமையியல் வழக்கு ஏற்கனவே தாக்கல் செய்துள்ளதால் அது பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை.

12. நான் தாக்கல் செய்த ஜீவனாம்ச வழக்கில் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்ட 28.04.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு என் கணவர் எனக்கு விவாகரத்து கேட்டு அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து நான் என் தரப்பில் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் தவறு, அனுப்பியுள்ளேன். அவ்வாறு அனுப்பிய பதில் அறிவிப்பை நான் இந்த வழக்கில் ஒரு ஆவணமாக குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் நான் பதில் அறிவிப்பே அனுப்பவில்லை என்றாலும் அதனால் தான் அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் பதில் அறிவிப்பு அனுப்பியது உண்மைதான்.

13. மேற்படி ம.சா.ஆ.5 ஆவணத்தின் 14வது பத்தியில் கடந்த 22.04.2022ம் தேதியன்று நான் எனது கணவர் வேலை பார்க்கும் நிறுவனத்திற்கு சென்று அவரை பணியிலிருந்து நீக்க சொல்லி தொடர்ச்சியாக வற்புறுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் உண்மையில் அப்படி எதுவும் நடக்கவில்லை. நான் தொடர்ச்சியாக என் கணவரை பற்றி பொய்யான குற்றச்சாட்டுகளை வைத்ததால் தான் என் கணவரை பணி நீக்கம் செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் என் கணவர் எந்த இடத்தில் வேலை செய்கிறார் என்று தெரிந்து கொள்வதற்காக தான் அந்த நிறுவனத்திற்கு சென்றேன். என் கணவர் என்ன வேலை செய்கிறார் என்று கேட்டு நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் என் கணவர் வேலை செய்த நிறுவனத்திற்கு 10.05.2024 அன்று அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த கேள்விக்கு எனக்கு மேற்படி நிறுவனத்தால் பதில் கொடுக்கப்பட்டது என்றாலும் அந்த பதிலில் என் கணவர் தற்போது அந்த நிறுவனத்தில் வேலையில் இல்லை என்றும் அவருடைய பணி நீக்க உத்தரவையும், experience certificate ஐயும் சேர்த்து அனுப்பி இருந்தார்கள் என்றாலும் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி பதிலோடு நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஆவணம் என்றாலும் சரிதான். (மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த நிறுவனத்தார் என் கணவர் Notice Period ல் உள்ளதாக தான் என்னிடம் தெரிவித்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் என் கணவர் Notice Period ல் உள்ளதாக குறிப்பிட்டு அவர்கள் பதில் எதுவும் அனுப்பவில்லை என்றாலும்

சரியல்ல. என்னுடைய தொடர்ச்சியான துன்புறுத்தல் காரணமாக தான் என் கணவர் விவாகரத்து கேட்டு எனக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினார் என்றால் தவறு. நான் அவரை துன்புறுத்தவில்லை.

14. சுகுணா நிறுவனத்திலிருந்து என் கணவர் 26.05.2022 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டார் என்றாலும் அதன் பிறகு வருமானம் ஏதுமின்றி கஷ்டப்பட்டு வருகிறார் என்றாலும் சரியல்ல. என் கணவரை அந்த நிறுவனம் பணி நீக்கம் செய்யவில்லை. அவராக தான் வேலையை விட்டு நின்றார். நான் மேற்படி நிறுவனத்தில் விசாரித்த போது அவர் மும்பை சென்று வேறு நிறுவனத்தில் வேலை பார்க்க இருப்பதாக சொன்னார்கள். தற்போது என் கணவர் எங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார் மற்றும் அவருடைய வருமானம் என்ன என்பது குறித்து எந்த ஒரு சான்றாவனங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் கணவர் சார்பாக தான் அது தாக்கல் செய்ய வேண்டும். நான் தாக்கல் செய்ய அவசியம் இல்லை. இறுதியாக என் கணவர் சுகுணா நிறுவனத்தில் தான் வேலை செய்தார் என்றால் எனக்கு தெரிந்தவரையில் அங்குதான் வேலை செய்தார்.

15. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த என் கணவருடைய Salary Slip ஆனது அவர் சுகுணா நிறுவனத்தில் வேலை செய்வதற்கு முன்பு வேலை செய்த SKM நிறுவனத்தில் வேலை பார்த்தபோது வழங்கப்பட்ட சம்பளம் குறித்த தாகும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஜீவனாம்ச மனுவின் ம.சா.ஆ.6 ஆவணத்தில் 03.09.2019ம் தேதியன்றே SKM நிறுவனத்தில் இருந்து பணியிலிருந்து நின்று விட்டார் என குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் சரிதான். என் கணவர் ரூ.75,000/- மாத சம்பளம் வாங்கியதாக நான் குறிப்பிட்டுள்ளது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் அவரோடு சேர்ந்து வாழும் போதே அவர் கைநிறைய சம்பாதித்தார். அதன் பிறகு அவர் அதே நிறுவனத்தில் Promotion பெற்று இன்னும் கூடுதல் சம்பளம் வாங்கினார்.

16. கடந்த 11.07.2022ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் DVC வழக்கை தாக்கல் செய்துவிட்டு, அதே தேதியில் மயிலாடுதுறையில் நான் RCR வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் RCR வழக்கை தான் முதலில் தாக்கல் செய்தேன். அதன் பிறகு தான் DVC வழக்கை தாக்கல் செய்தேன். என் கணவர் விவாகரத்து கேட்டு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகுதான் நான் RCR வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

2020 முதல் 2022 காலகட்டம் வரை நான் ஜீவனாம்சம் கேட்டு எந்த ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை பராமரித்துக்கொள்ள எனக்கு போதுமான வசதி வாய்ப்புகள் இருந்ததால்தான் நான் ஜீவனாம்ச வழக்கை மேற்படி காலகட்டத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நான் எனது நோயுற்ற தந்தையோடு மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். என்னுடைய ஜீவனாம்ச உரிமையை நிலை நிறுத்திக் கொள்வதற்காகத்தான் பெயரளவிற்கு RCR வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. RCR வழக்கில் எனக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை செயல்படுத்த சொல்லி நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் என் கணவருக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். உண்மையில் எனக்கு என் கணவரோடு சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றாலும் அதனால் தான் நான் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியில்லை.

17. 2022ம் வருடத்தில் என் கணவருக்கு கொரோனா நோய் தொற்று ஏற்பட்டு கொங்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவருடைய அக்காவான 2ம் எதிர்மனுதாரரின் இறப்பிற்கு நான் செல்லவில்லை என்றால் அவர் இறந்தது பற்றியே எனக்கு தெரியாது. நான் என் கணவரோடு சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள DVC மனுவில் பிரிவு 19(8)ன் கீழ் எனது நகையோ, உடைமையையோ திரும்ப கேட்டு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். உண்மையில் என்னுடைய நகைகளோ, துணிமணிகளோ, வேறு பொருட்களோ என் கணவர் வசம் இல்லை என்றாலும் அதனால் தான் நான் அதனை திரும்ப கேட்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த பொருட்கள் அவரிடம் தான் உள்ளது. அதேபோல நான் என் மனுவில் பிரிவு 22ன் கீழான இழப்பீடு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் தவறு, நான் கேட்டுள்ளேன்.

18. நானும் என் குழந்தைகளும் தொடர் மருத்துவ சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆகவே மருத்துவ சிகிச்சைக்காக கோரப்பட்டு இருக்கும் தொகையானது மிகைப்படுத்தப்பட்ட தொகை என்றால் சரியல்ல. எனது தாயார் பெயர் என்னவென்றால் லட்சுமி என்பதாகும். என் தந்தை பெயர் என்ன என்றால் பார்த்தசாரதி என்பதாகும். பட்டா எண் 2420 புல எண் 230/3ல் சீர்காழியில் என் தாயாருக்கும் தகப்பனாருக்கும் 2 வீடுகள்

உள்ளது என்றால் சரிதான். அதேபோல பட்டா எண் 1690, புல எண் 230 1A , 1Aவில் என் தகப்பனார் மற்றும் தாயாருக்கு 2 வீடுகள் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4 வீடுகளும் வாடகைக்கு விடப்பட்டு அந்த வாடகை வருமானத்தை நான் தான் பெற்றுக்கொள்கிறேன் என்றால் என் தந்தை எந்த வீட்டையும் வாடகைக்கு விடவில்லை நானும் எந்த வாடகை தொகையையும் வாங்கிக் கொள்ளவில்லை.

19. நான் MC வழக்கில் enhancement petition னோடு சேர்த்து தாக்கல் செய்த 30.08.2023 தேதி இட்ட கிரைய ஆவணத்தின் படி 1ம் எதிர்மனுதாரர் வாங்கிய வீட்டை விற்பனை செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் காணப்படும் கிரைய தொகையில் ரூ.28,11,000/– வங்கி கடனுக்காக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல ஜல்லிப்பட்டி SBI வங்கி கிளைக்கு ரூ.2,31,000/– கடனுக்காக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து விற்பனை மூலமாக கிடைத்த வருவாயை என் கணவர் சொந்தமாக செலவு செய்யவில்லை என்றாலும் வங்கிக் கடன் தான் அடைத்துள்ளார் என்றாலும் தவறு உண்மையில் அவர் அந்த சொத்தை ரூ.49,95,000/– க்கு விற்பனை செய்துள்ளார்.

20. 2வது குழந்தைக்கு சீர்காழியில் வைத்து தான் முடி இரக்கும் நிகழ்வு நடைபெற்றது என்றால் சரிதான். அந்த நிகழ்ச்சிக்கு என் கணவருக்கு நான் எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏனெனில் அவர் எங்கு இருந்தார் என்று தெரியவில்லை. இந்த நீதிமன்றம் மூலமாக பணம் கொடுக்கச் சொல்லி சொன்ன போது கூட, என்னுடைய தாயாரின் வங்கி கணக்கிற்கு தான் நான் பணத்தை செலுத்த சொல்லி அந்த வங்கி கணக்கு எண்ணை தான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் என் கணவரிடம் நேரடியாக பணத்தை கொடுக்கச் சொன்னேன். அவர் வங்கி மூலம் தான் கொடுக்க முடியும் என்று சொன்னதால் என் தாயாரின் வங்கி கணக்கை கொடுத்தேன். நான் என்னுடைய பெற்றோர்களின் துர்போதனைகளை கேட்டு எந்தவித காரணமும் இன்றி என் கணவரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல. ஆகவே உண்மையில் எனக்கு குடும்ப வன்முறை எதுவும் நிகழவில்லை என்றாலும் எனக்கு அந்த மனுவில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. என் கணவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு தற்போது எந்த ஒரு பணிக்கும் செல்ல முடியாத நிலையில் இருந்து வருகிறார் என்றாலும் அவருக்கு போதிய வருமானமும் கிடையாது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**